**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ. வெ. எண். 103** **நாள்: 16.05.2025**

**செம்பரம்பாக்கம், பூண்டி, செங்குன்றம் மற்றும் சோழவரம் ஏரிகளிலிருந்து மிக அதிக வெள்ளநீர் வெளியேற்றப்படும் பொழுது ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் பொதுமக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைப்பது குறித்த விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி இன்று (16.05.2025) மாநகராட்சிக்குட்பட்ட 6 இடங்களில் நடைபெற்றது.**

செம்பரம்பாக்கம், பூண்டி, செங்குன்றம் மற்றும் சோழவரம் ஏரிகளிலிருந்து மிக அதிக வெள்ளநீர் வெளியேற்றப்படும் பொழுது ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் பொதுமக்களை எவ்வாறு மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைப்பது என்பது குறித்த விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சி இன்று (16.05.2025) கீழ்காணும் இடங்களில் நடைபெற்றது.

1. மாத்தூர் பாலசுப்பரமணி நகர் (மண்டலம் 2)
2. சடையான்குப்பம் (மண்டலம் 2)
3. கானுநகர் (மண்டலம் 10)
4. காசி திரையரங்கம் அருகில் உள்ள பாலம் (மண்டலம் 10 )
5. போரூர் (மண்டலம் 11 )
6. கோட்டூர்புரம் (மண்டலம் 13 )

மேற்படி ஒத்திகை நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய்த்துறை, நீர்வளத்துறை, காவல்துறை, மருத்துவத்துறை, தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை, தீயணைப்புத் துறை, மின்வாரியம் உள்ளிட்ட தொடர்புடைய அனைத்துத் துறைகளின் சார்பிலும் பங்கேற்று விழிப்புணர்வு ஒத்திகை நடைபெற்றது. இதில் ஆற்றில் வெள்ளப்பெருக்கு அதிகமாக வரும்போது தாழ்வான பகுதிகளில் வசிப்போரை வெளியேற்றுதல், படகு மூலம் மீட்டுதல், தாழ்வான குடியிருப்பு பகுதிகளில் உள்ள வீடுகளில் தங்கியிருக்கும் கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்களை பாதுகாப்பாக மீட்டுதல், வெள்ளநீர் சூழும் குடியிருப்புகளில் உள்ளவர்களை மீட்டுதல், முதலுதவி சிகிச்சை அளித்தல், மருத்துவ முகாம் அமைத்து மக்களுக்கு சிகிச்சை வழங்குதல், நிவாரண மையங்களுக்கு கொண்டு செல்லுதல், நிவாரண மையத்தில் தேவையான உணவுப் பொருட்களை தயார் நிலையில் வைத்திருத்தல், மருத்துவ சிகிச்சை தேவைப்படுவோருக்கு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உரிய சிகிச்சை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு மீட்பு ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

செம்பரம்பாக்கம், பூண்டி, செங்குன்றம் மற்றும் சோழவரம் ஏரிகளிலிருந்து மிக அதிக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் பொதுமக்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மற்றும் 1913 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தங்களது புகார்களைத் தெரிவிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஒத்திகை நிகழ்வுகளில் பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய்த்துறை, நீர்வளத்துறை, காவல்துறை, மருத்துவத்துறை, தேசிய பேரிடர் மீட்புப் படை உள்ளிட்ட தொடர்புடைய பல்வேறு துறைகளின் அலுவலர்கள் பங்கேற்று ஒத்திகை நிகழ்வினை மேற்கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**